1992 பிப்ரவரி 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தஞ்சை மாவட்டத்தில் தாளடிப் பயிர் இன்னும் ஒரு தண்ணீர் விட்டால் அதில் நல்ல சாகுபடி கிடைப்பதற்குரிய வாய்ப்பு இருக்கிறது, அங்கே தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கின்ற காரணத்தால், பெரும் பாதிப்புக்கு ஆளாகிற நிலை ஏற்பட்டிருக்கிறது என்கின்ற ஒரு முக்கியமான பிரச்சினையை திரு. ஆர். சிங்காரம், திரு. கு. தங்கமுத்து ஆகிய இருவரும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். சுருக்கமாக அந்த விபரத்தை மட்டும் படிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். திரு. ஆர். சிங்காரம்.

முற்பகல் 10-40

2. சிறப்புக் குறிப்பு

தஞ்சை மாவட்டத்தில் கடலோர கடைமடைப் பகுதிகளில் பயிர்கள் வாடுவதைத் தவிர்க்க தண்ணீர் விட வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதியில் கடலோர கடைமடைப் பகுதிகளில் கல்லணை கால்வாயில் சி. எம். டி. தண்ணீர் தாமதமாக கிடைத்ததால் சாகுபடி தாமதமாகிவிட்டது. சுமார் பத்தாயிரம் ஏக்கர் நிலங்கள் அப்பகுதியில் பச்சையாக இருக்கின்றன. இது வரை பல ஆண்டுக் காலமாக பச்சையையே பார்க்காத அந்தப் பகுதி, கடைமடைப் பகுதி மக்கள், இன்று புரட்சித் தலைவி முதல்வர் அவர்களின் காலத்திலேதான் வறட்சி நீங்கி மறுமலர்ச்சி ஏற்பட்டு இந்த விவசாயிகள் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அப்பயிர்களைக் காப்பாற்ற வேண்டுமானால் இன்னும் இருபது நாட்களுக்காவது கடைமடைப் பகுதியில் தண்ணீர் விட்டால் தான் காப்பாற்ற முடியும், அந்தப் பகுதி மக்களை வாழ வைக்க முடியும். இப்படிப்பட்ட அவலநிலை இருப்பதால், தயவு செய்து மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இதைப் பரிசிலனை செய்து இருபது நாட்களுக்காவது அந்தப் பகுதியில் தண்ணீர் திறந்துவிட்டால் அந்த மக்களை காப்பாற்ற முடியும். இதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் இங்கே தன்னுடைய நிலையை எடுத்துச் சொன்னார்கள். தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி மற்றும் பட்டுக்கோட்டை பகுதிகளுக்கு இப்போது இருக்கின்ற பாசன பயிர்களுக்கு வேண்டிய தண்ணீரை திறந்துவிட வேண்டும் என்கிறார். நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின் பேரிலே மகாமகத்திற்குத் தண்ணீர் விட இருக்கிறோம். அத்தோடு சேர்த்து நம்முடைய உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளையும் ஏற்று—ஏற்கெனவே நாங்கள் கொடுப்பதாகத்தான் இருந்தோம்—இருந்தாலும் உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள்—ஆகவே வருகின்ற 7-ஆம் தேதியிலிருந்து 11-ஆம் தேதிக்குள் தண்ணீர் திறந்துவிடப்பட்டு அந்தப் பயிர்கள் பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே நம்முடைய புரட்சி தலைவியினுடைய காலத்திலே அவர் என்றைக்கும் மகிழ்ச்சியாக இருப்பார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம் திரு. கு. தங்கமுத்து தவிர திரு. ஜி. பழனிசாமி அவர்களும் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கான வேறு ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) உங்களுடைய பெயரும் இதிலே வந்திருக்கிறது. மூன்று பேரும் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொல்லிவிட்டேன். மேலும் இதிலே ஒன்றும் சொல்ல வேண்டாம். பிறகு உங்களுக்கு அனுமதி கொடுத்தால் திரு. தங்கமுத்து அவர்களும் பேச வேண்டிவரும், வேண்டாம்.

3. கவன ஈர்ப்பு

(அ) பேராவூரணி ஒன்றியம் களத்தூர் மற்றும் இடையாத்தியில் கல்லணைக் கால்வாய் பாலங்கள் சீர் செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு திரு. ஆர். சிங்காரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருவார். திரு.ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் களத்தூர் மற்றும் இடையாத்தி ஊர்களில் கல்லணைக்